# ★ தமிழீழமெங்கும் இன்று கரும்புலிகள் தினம் அனுஷ்டிப்பு!

★ விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 21 இதழ் 151
யாழ்ப்பாணம் புதன்கிழமை 05 - 7 - 1995

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினம் இன்று தமிழீழம எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

யாழ். குடாநாடு பூராகவும் கரும்புலிகள் தினம் எழுச்சி பூர்வமாக சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'

வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சல் நிற கொடிகளால அலங்கரிக்கப்பட்டுள்ளன. பிரதான இ ங்களில் கரும்புலிகளை சித்தரிக்கும் அலங்கார வீதி வளைவுகள் அமைக்கப் பட்டுள்ளன. மற்றும் பதா

(5ம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில்
## கப்டன் மில்லர் சிலை திறப்பு
## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் தினப் பொதுக் கூட்டம் இன்று இரவு 7. 00 மணியளவில் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கரும்புலிகள் நினைவுக்கல் நாட்டல், முதல் கரும்புலி கப்டன் மில்லர் சிலை திரைநீக்கம் கரும்புலிகள் நினைவாலய திறப்புவிழா போன்ற நிகழ்வுகளும் இன்று நெல்லியடியில் நடைபெறுகிறது.

இன்று மாலை 6. 00 மணியளவில் நெல்லியடிச் சந்தியில் ஆரம்பமாகும். ஊர் வ ல ம் நினைவாலய முன்றலை வந்த

[-6ம் பக்கம் பார்க்க]

## ★ வடமராட்சிக் கடலில்
# ரோந்து வந்த கடற்படையை
# விடுதலைப்புலிகள் விரட்டியடிப்பு

## இழப்புகளுடன் படையினர் பின்வாங்கினர்

(நெல்லியடி)

**வடமராட்சி பருத்தித்துறை கடற்பரப்பில் மீனவர்களைத்தாக்கி வந்த சிறிலங்கா கடற்படையினரை நேற்று வழிமறித்து விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர் இத்தாக்குதலையடுத்து படையினர் இழப்புக்களுடன் பின்வாங்கினர்'**

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று பீரங்கிப்படகில் வந்த சிறிலங்கா கடற்படையினரை விடுதலைப்புலிகளை விரட்டி அடித்தனர்.

இதுவரை காலமும் மீனவர் மீது தாக்குதல் நடத்தி வந்த கடற்படையினருக்கு பதிலடி கொடுத்த இந்தத் தாக்குதல் விடுதலைப்புலிகளின்கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது. கடற்புலிகளின் பலத்த எதிர் தாக்குதலை அடுத்து கடற் படையினர் இழப்புகளுடன் பின்வாங்கினர்.

நேற்று அதிகாலை பீரங்கிப் படகில் பருத்தித்துறை கடற் பகுதியில் பிரவேசித்த கடற் படையினரை வழிமறித்து கடற்புலிகள் அவர்களை

(5ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலும்
## விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்]

கிளிநொச்சிப் பகுதியிலும் நேற்றுக்காலை ஸ்ரீலங்கா விமானப் படையினரின் சுப்பசொனிக் விமானங்கள் குண்டு வீச்சை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி சந்தையை அண்டிய பகுதிகளில் இடம் பெற்ற இக் குண்டுவீச்சினால ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. 90-கி-ரி

## நாடாளுமன்றத்தில்
## ஐ. தே .க. ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியினர் நாடாளுமன்ற வளாகத்தினுள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினார்கள் என்று பி. பி. சி. சிங்கள சேவை தெரிவித்தது.

பி. பி. சி மேலும் தெரிவிக்கையில்: நாடாளுமன்ற கூட்டம் இடம்பெறுவதற்கு முன் வெளியே வந்து எல்லோரும் கூடி இந்த ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். பொது சன முன்னணி அரசாங்கம் தேர்தலில் கூறியபடி நடந்து

(5-ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி கிழக்கில்
## சுப்பசொனிக் குண்டுத் தாக்குதல்
## நால்வர் காயம்; வீடுகள் சேதம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை சுப்பசொனிக் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் நான்கு பேர் காயமடைந்தனர் பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 6 மணியளவில் தென்மராட்சி வான்பரப்புக்குள் திடீரென ஊடுருவிய இரண்டு சுப்பசொனிக் குண்டு வீச்சு விமானங்கள் தென்மராட்சி கிழக்குப் பகுதியான பளை, முகமாலையில் நான்கு குண்டுகளையும், கொடிகாமம் ஐயனார் கோவிலடிப் பகுதியில் ரொக்கட் தாக்குதல்களையும் மேற்கொண்டன.

பளை முகமாலைப் பகுதியில் உள்ள தென்னம் தோட்டம்

(6ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நோக்கி
## பீரங்கி, ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியை நோக்கி கடற் படையினரும் பலாலி இராணுவ முகாமிலுள்ளவர்களும் பீ ர ங் கி ஷெல் தாக்குதல்களை நடத்தினார்கள்.

இத் தாக்குதல்களினால் வல்வெட்டித்துறைப் பகுதியில் பல குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை 12 15 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வடமராட்சிப் பகுதி, வல்வை பொலிகண்டி, திக்கம் மக்கள் குடிபிருப்புக்கள் மீது ஆட்லறி ஷெல்த்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை வடமராட்சிக் கடற் பரப்பிலிருந்து சிறிலங்காக் கடற் படையினர் மேற்படி இடங்களிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கிப் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இவற்றில் பெருமளவு கடலில் வீழ்ந்து வெடித்ததால் அதிக சேதம் ஏற்படவில்லை.

பலாலி ஆட்லறி ஷெல்களினால் வல்வைப் பகுதியில் பல

[5-ம் பக்கம் பார்க்க]

## வடகிழக்கில் நிலைமை மோசம்
## தமிழ்மக்கள் உயிரிழப்பு அதிகம்
## ஐ. சி. ஆர். சி. கவலை தெரிவிப்பு

(ஜெனிவா)

இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் நிலைமைகள் மிகவும் மோசமடைந்து காணப்படுவதாகவும் சண்டையின்போது ஏராளமான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன என்றும் சர்வதேச செஞ்சிலுவைசங்கம்ஜெனிவா நகரில் அறிக்கைவெளியிட்டுள்ளது:

அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது வடக்கிலும் கிழக்லும் அச்ச

(6ம் பக்கம் பார்க்க)

## அரசின் பொய்ப் பிரசாரங்களுக்கு
## கத்தோலிக்க மதகுருமார்
## பலத்த கண்டனம்

]யாழ்ப்பாணம்[

விடுதலைப்புலிகளுக்கும் கத்தோலிக்கத் தமிழ்மக்களுக்குமிடையில் பிரிவினைகளைத் தோற்றுவிக்கும் முகமாக, இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பொய்பிரச்சாரங்

(6ம் பக்சம் பார்க்க(

## வொய்ஸ் ஒவ் அமெரிக்காவிற்கு எதிரான
## ஆர்ப்பாட்டத்தினர் மீது பொலிஸார்
## துப்பாக்கிச் சூடு; ஒருவர் பலி

(கொழும்பு)

இரணவிலவில அமெரிக்காவினால் கட்டப்படும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி கட்டுமான பணிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துநேற்றுகொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின்முன்ஆர்ப்பாட்டம்நடத்தி

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தட்டச்சு, ரேணியோ திருத்துதல்

சகலவிதமானதட்டச்சுஇயந்திரங்கள், ரேணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மருதம், 66, மணிக்கூட்டுவீதி. (ஆஸ்பத்திரிமுன்பாக). யாழ்ப்பாணம். (சி-1540)

### விண்ணப்பப் படிவம்

G. C. E (O/L) விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. பாலாஜி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (ஏ-5067)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)

## பூட்டியசைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

பூட்டிய நிலையில் இருந்த சைக்கிள் ஒன்று திருடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை கொழும்புத்துறை மேற்கில் இடம் பெற்றுள்ளது.

கொழும்புத்துறை மேற்கில் மாதர் சங்க ஆண்டுவிழா நிகழ்ச்சிகளை பார்த்து விட்டு சைக்கிளை எடுக்கவந்த சமயமே சைக்கிள் காணுமல் போயுள்ளதாக சைக்கிள் உரிமையாளர் சி. சிவலிங்கம் தெரிவித்தார். -170

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995 – 07 -05

புதன் இரவு

8-02 கரும்புலிகள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி அரவிந்தன் எழுதிய "தியாகத தின் சிகரங்கள்"
8-30 செய்திகள்
8-40 நாடகம் ந. கிருஷ்ணு எழுதிய "அவலம்"

**1995–07–06**

வியாழன் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 விடுதலை கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
8-00 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–07–05**

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புதியவை
5-15 படப்பாடல்
5 30 அறிவூற்று
6-00 சிந்தனைக்குச் சில வினடிகள்
6-02 உங்கள் தெரிவு
6-15 விளையாட்டு ச்செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து உங்கள் தெரிவு

# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் பின்வரும் பதவிகளுக்கு தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் 1995-07-15ந் திகதி வரை தமிழீழ காவல்துறை, பழைய பூங்கா அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும், ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

### (01) உப பரிசோதகர் தரம்:

1. வயது: 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை:
   க. பொ. த. (சாதாரண தரத்தில்) ஆறு பாடங்கள். தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உயர்தரம்)
3. உயரம்: 5' 6"க்கு மேல்.

### (02) காவலர் தரம்:

1. வயது: 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை;
   க. பொ. த. (சாதாரண தரத்தில்) தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தி,
3. உயரம்: 5' 6''க்கு மேல்.

### (03) வரவேற்பாளர்:

1, வயது: 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை:
   க. பொ. த, (சாதாரண தரம்) 6 பாடங்களில் தமிழ், கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி. ஆங்கிலத்தில் விசேட சித்தி பெற்றிருப்பின் விசேட தகைமையாகக் கணிக்கப்படும்.
3. அனுபவம்: தமிழ், ஆங்கிலம் நன்கு பேசக்கூடியவராகவும், அரச/தனியார் நிறுவனங்களில் வரவேற்பாளராக 2 வருடம் கடமையாற்றிய அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் நன்று.

### (04) எழுதுவினைஞர்:

1. வயது. 18 - 35 வரை.
2. கல்வித் தகைமை:
   க. பொ த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் தமிழ், கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி அல்லது க. பொ. த. (உயர்தரம்).
3: அனுபவம்: அரச/தனியார் நிறுவனங்களில் எழுதுவினைஞராக இரண்டு வருடங்கள் கடமையாற்றிய அனுபவம்

### (05) கணக்கியல் எழுதுவினைஞர்

1. வயது. 18-35வரை
2. கல்வித் தகைமை:-
   (1) க. பொ. த சாதாரண) பரீட்சையில் 6 பாடங்களில் தமிழ், கணிதம்/எண்கணிதம் வர்த்தகம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி.
   (2) க பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் வர்த்தகம், கணக்கியல், பொருளியல் ஆகிய பாடங்களில் ஏதேனும் இரு பாடங்களில் சித்தி.

1. அனுபவம்:-
   அரச/தனியார் நிறுவனங்களில் கணக்கியல் எழுதுவினைஞராக இரண்டு வருடம் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.

### (06) தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்

1. வயது:- 18 - 35 வரை
2. கல்வித்தகைமை:-
   க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் 6 பாடங்களில் தமிழ், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகிய பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி

3 அனுபவம்:-
   அரச/தனியார் நிறுவனத்தில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்தாளராக குறைந்தது இரண்டு வருட அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

### (07) சாரதிகள்

1. வயது:- 18 - 35 வரை
2. கல்வித்தகைமை:-
   8ம் வகுப்பு சித்தியுடன் சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.

3 அனுபவம்:-
   5 வருடத்திற்கு குறையாத காலம் சாரதியாக கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்

நன்றி

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி-5064)

## கேணல் கிட்டு பூங்கா திறக்கும் நேர விபரம்

(யாழ்ப்பாணம்)

கேணல் கிட்டு பூங்கா நாளை 6 ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் கீழ்வரும் நேர அட்டவணைப்படி மக்கள் பார்வையிடுவதற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமைகளில் பி.ப 3.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணி வரை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.00 மணி தொடக்கம் இரவு 9.00மணி வரை, ஏனைய நாட்களில் பி.ப 3.00 மணி தொடக்கம் இரவு 6.30 மணி வரை. -ரி

## உயிராயுதம் பகுதி - 3 நிதர்சன சிறப்பு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனத்தின் சிறப்புவெளியீடான உயிராயுதம் பகுதி 3 யாழ் ஸ்ரீதரில் தினசரி 4 30 காட்சி காண்பிக்கப்படுகிறது. கரும்புலிகளின்வீரசாதனைகளை இதயத்தைத் தொட்டு நிற்கும் அவர்களின் உள்ளத்து உணர்வுகளை சித்தரிக்கும் விவரண ஒளிப்படநாடா

காங்கேசன்துறையில் சிறிலங்கா கடற்படையின் கட்டளையிடும் தலைமையகத் தாய்க்கப்பல் மீது தாக்குதல் நடத்திய முதல் பெண் கடற்கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி

சிறிலங்கா கடற்படையின் சாகரவர்த்தன யுத்தக்கப்பல் மீது தாக்குதல் நடத்திய கடற்கரும்புலியான லெப். கேணல் நளாயினி மேயர் மங்கை கப்டன் லக்ஸ்மன் கப்டன் வாமன்.

வெற்றிலைக்கேணியில் தரையிறங்கும் கப்பல் மீது தாக்குதல் மேற்கொண்ட கடற்கரும்புலி மேஜர் வித்தி திருமலை கடற்படைத்தளத்தில் ரணசுறு சூரயா யுத்தக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்திய கடற்கரும்புலிகளான மேஜர் மதுஷா கப்டன் சாந்தா மேஜர் கதிரவன் மேஜர் தணிகைமாறன் ஆகியோரின் வீரகாவியங்களை இவ்விவரண ஒளிப்படநாடா உள்ளடக்கியுள்ளது. ரி

## இறுதிவீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 4ம் திகதி வடமராட்சி கடற்பரப்பில் மீனவரை தாக்க வந்த ஸ்ரீலங்கா கடற்படையை வழிமறித்து தாக்கியதில் வீரச்சாவைத்தழுவிக் கொண்ட கடற்புலி லெ. ஆதவன் (பாலகிருஸ்ணன் பாஸ்கர் தும்பளை பருத்தித்துறை) அவர்களின் வித்துடல் இன்று 5ம் திகதி மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து அணிவகுப்பு மாரியாதைகளுடன் எடுத்துச்செல்லப்பட்டு பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் மு.ப 9-30 மணிக்கு மக்கள் இறுதி வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டு இறுதி வீரவணக்கக் கூட்டமும் நிறைவுற அங்கிருந்து மீண்டும் அணிவகுப்பு மாரியாதைகளுடன் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் விதைக்கப்படும். ரி


## தேவை

36, 24, 18 Point ஆகிய அச்சடிக்கும் எழுத்துக்கள் தேவை.

வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**ஈழநாடு**
63, சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(எ 5069)


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

சுத்திகரிப்பு/பொதுத் தொழிலாளர் (அமைய)

# பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண பாநகரசபை அமைய அடிப்படையில் தொழிலாளர் பதவி வெற்றடிகளை நிரப்பத் தீர்மானித்துள்ளது.

**தகைமைகள்:**

1. கல்வி: 5ம் வகுப்பில் சித்தி
2. வயது: 18 வயது தொடக்கம் 45 வயது வரை
3, யாழ்ப்பாண மாநகரசபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் 15 07-1995ம் திகதியன்று சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் பண்டார மாளிகை வளவில் அமைந்துள்ள மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்திற்குச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1995-07-04.

(எ-5070)

### மணிவாக்கு

ஒடுக்குமுறைக்கு எதிராக மௌனமாகஇருக்கும் மனிதன் அனைத்து அம்சங்களிலிருந்தும் இறந்துவிடுகின்றான்.

— வோல் சோயிங்கா

## நமது நோக்கு

### சந்திரிகாவின் செவ்வி

திருமதி சந்திரிகா குமாரதுங்க 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகைக்கு வழங்கியபேட்டியில் ''சிறுபான்மை மக்களாகிய தமிழர்களும் முஸ்லிம்களும் பல குறைபாடுகளை எதிர் நோக்குகிறார்கள் உரிமையை அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதை இந்த அரசுதான் முதன் முதலாக ஏற்றுக் கொண்டுள்ளது'' என்று கூறியுள்ளார்.

இவரது இக்கூற்றானது தமிழர்களது உரிமையை மதிப்பது போன்ற ஒரு தோற்றத்தை உலகிற்குக் காட்டும் அதே சமயம் இனப்பிரச்சினையின் அடிப்படையையே இவர் மூடி மறைக்க எத்தனிக்கிறார் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

தமிழர்களை ஒரு சிறுபான்மை மக்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். சிங்களவரோடு ஒப்பிடுகையில் தமிழர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் காரணத்தால் அவர்களைச் சிறுபான்மை இனமென உண்மையைத் திரிபுபடுத்திக் காட்டச் சிங்களத் தலைவர்கள் நீண்டகாலமாக எத்தனித்து வருகிறார்கள்.

இலங்கைத் தீவில் இரு தேசிய இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சிங்கள இன மக்கள் போலவே தமிழர்களும் அவர்களிலிருந்து வேறுபட்ட தனித்துவமான ஒரு தேசிய இன மக்களாவர். அவர்களுக்கென்று தனியான பாசை பழக்கவழக்கங்கள், கலாச்சாரங்கள இருப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கென்று தனியான தாயகமும், அதை அவர்கள் பலநூறு வருடங்கள் ஆண்டு வந்த சரித்திரமும் அவர்களுக்கு உண்டு.

தற்செயலாக சிங்களவரிடம் அகப்பட்ட இலங்கைத் தீவு முழுமைக்குமான அதிகாரத்தைத் துஷ்பிரயோகித்து தமிழ்த் தேசிய இனத்தை அடக்கி ஆளவும் அழித்தொழிக்கவுமே சிங்கள அரசியல் வாதிகள் எத்தனித்துவருகிறார்கள். சந்திரிகா அம்மையாரும் இதற்கு விதிவிலக்கல்ல. சிங்களவர்கள் ஒருபோதும் திருந்தப்போவதில்லை என்பது தெளிவு.

அதிகாரம் சிங்களவருக்குக் கைமாறத் தொடங்கிய சட்டசபைக் காலத்திலிருந்தே சிங்கள பேரினவாதத்தின் பயங்கரத் தோற்றம் வெளிப்படத் தொடங்கியது.

சிங்களவரிடம் முழு அதிகாரமும் இருக்கும் அரசியல் அமைப்பின் கீழ் தமிழ் தேசிய இனத்திற்கு இடமில்லை என்பது உறுதியாகிய பல சம்பவங்களைப் பொறுமையுடன் சகித்த பல வருடங்களின் பின்பே தமிழீழம்தான் தமிழர்களின் உரிமைகளை பேணக் கூடிய ஒரே தீர்வாகும் என்பதைத் தமிழர்கள் உணர்ந்து, வெளிப்படுத்தி அதை அடையும் நடவடிக்கைகளில் இறங்கினார்கள்.

தமிழீழத்தைஉருவாக்குவதற்கான முயற்சியில் தமிழர்கள் வெகுதூரம் முன்னேறியிருக்கும் இந்த நேரத்திலும், நீதியான ஒரு தீர்வை அடைவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேர்மையாக எத்தனிக்காது தமிழர்களைச் சிறுபான்மை என்றும், சிறுபான்மைஇன முஸ்லிம்களுடன் சமப்படுத்திக்கூறியும் மற்றும் தமிழின ஒடுக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதானது சிறிலங்கா எனும் சிங்கள நாட்டில் தமிழர்களை உள்ளடக்கிய தீர்வுக்கு இடமில்லை என்பதை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் தமிழீழம்தான் தமிழர்களுக்கு முடிவான ஒரே தீர்வாக இருக்க முடியும் என்றமுடிவின் தீர்க்கதரிசனத்தையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

# வார்த்தைகளின் வர்ணனையை கடந்த கரும்புலிகளின் உயிர்த் தியாகம்

அன்று... வடமராட்சிப் பிரதேசம் முழுவதுமே மயான அமைதியில் மூழ்கிக் கிடந்தது. இரத்தத்தையும், தசைப் பிண்டங்களையும் தன் மேனி மீது சுமந்து நாற்றமெடுத்துக கிடந்தது அந்தமண்...... வேதனையோடு.

'ஒப்பரேசன் லிபரேசன்' நடத்திய வெற்றிக் களிப்பில் இராணுவத்தினர் மதுபோதையில் பிதற்றிக் கிடந்தனர். 'புலிகளை ஒழித்துவிட்டோம்' என.

வடமராட்சி மக்கள் உறவினர்களையும், உடைமைகளையும் இழந்து வெகுதொலைவில்...தம் இருப்பிடத்துக்காய் ஏங்கி நின்றனர். பிணக்காடாய் அவர்கள் இருப்பிடம்......

இவ்வேளையில் தான் ஒரு இரவு......ஊரே உறங்கிக் கிடந்தது. மூச்சுவிடப் பயந்து பலரும் மூலைக்குமூலை முடங்கிகொண்டனர். ஒருவன்மட்டும் கொட்டக் கொட்ட கண் விழித்து காத்திருந்து வாகனம் சகிதம் நகர்கிறான். இனவெறியர்களை தாங்கியிருந்த அந் நெல்லியடி மகாவித்தியாலயம் தனது இறுதி நேரத்தைக் குறித்துக்கொண்டது.

''டமார்'' அந்த வடமராட்சிப் பிரதேசமே ஒரு நிமிடம் அதிர்ந்தது.

வெற்றிக் களிப்பில் எக்காளமிட்டுக் கொண்டிருந்த இராணுவத்தினரின் முகாம் இருந்த இடம் தெரியாமல் போனது. முதுகில் குண்டை சுமந்து சென்று கரும்புலி மில்லர் அரசுக்கும், படையினருக்கும் கொடுத்த முதல் சாவுமணி 'எதிரியை அழிக்க நாமே வெடிகுண்டாவோம்'' என்ற கோஷம் நிலைநாட்டப்பட்டது.

**விசாலி**

இது நடந்தது 1987 ஜூலை 5. இதே தினமான ஜூலை 5 தான் கரும்புலிகள் தினமாக தேசிய தலைவர் வே. பிரபாகரனால் பிரகடனப்படுத்தப்பட்டது.

கரும்புலி எனும் போது கருமை - மனோதிடத்தையும், உறுதிப்பாட்டையும் குறித்து நிற்கிறது. இன்னுமொரு அர்த்தத்தில் கூறினால் இருள்-புலப்படாத இரகசியமான, பூடகமான செயற்பாட்டைக் குறிக்கிறது

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலேயே இக்கரும்புலி அணி ஒரு திருப்பத்தையும் பரிணாம வளர்ச்சியையும் ஏற்படுத்திவிட்டது. இதற்குக் காரணம் அவர்களின் தியாகம்.

மில்லரின் வழியில் எத்தனை கரும்புலிகள். கொலின்ஸ்...... சிதம்பரம்...... டாம்போ...... போர்க்...... அங்கையற்கண்ணி......— நளாயினி...... புவீந்திரன்...... மதுஷா...... தணிகைமாறன்... சாந்தா... கதிரவன்...... இன்னும் நீண்டுகொண்டே போகும் இந்த பெயர்ப் பட்டியல்.

கரும்புலி என்றால் இன்று உலகமே ஒரு கணம் அதிரும். உலக நாடுகள் எதனிலுமே இல்லாத நினைத்துக்கூடப் பார்க்க முடியாத சாதனையின், தியாகத்தின் சின்னங்கள் தான் இக்கரும்புலிகள்.

ஒரு சிறு புழுக்கூட தன் உயிருக்கு ஆபத்து என்றால் தன் முதுகை வளைத்து தப்பிக் கொள்ள முயற்சிக்கும். ஆனால் இவர்கள் முதுகிலேயே வெடிகுண்டுகளை சுமந்து கொண்டு தம் சாவைப் பற்றி சிந்தியாது முகாமுக்குள் புகுகின்றனர். அவ்வளவு வீராவேசம் அவர்களுக்கு. தமது இறுதி நேரத்தில் கூட தன்னை இத் தாக்குதலை வெற்றிகரமாகச் செய்யவேண்டும் என்பதே அவர்களது சிந்தனையாகஇருக்கிறது. தம் இலக்கை அடைவதில் அத்தனை உறுதி அவர்களுக்கு.

வாழத்தான் எல்லோரும் பிறந்தார்கள் ஆனால் இவர்கள் மட்டும் வித்தியாசமானவர்களாய் போட்டி போட்டுக் கொண்டு தம் சாவுநாளைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் போடுகின்றார்களே! நாளை சதைப்பிண்டங்களாய் சிதறிப் போவேன் என தெரிந்தும் சாதாரணமாய்......... வெகு சாதாரணமாய் விடை பெறுகிறார்களே; அதனால் தான் வார்த்தைகளால் வர்ணிக்கப்பட முடியாத வரலாறு அவர்களுக்கு உண்டு நடுகற்களில் பொறிக்க முடியாத அவர்களின் நினைவுகளுமுண்டு.

1ம் கட்டப் போரிலும் சரி. 2ம் 3ம் கட்ட ஈழப் போரிலும் சரி கரும்புலிகளின் சாதனை எதிரியை நிலைகுலைய வைத்து உயர் பீடங்களையே ஆட்டம் காண வைத்துக் கொண்டிருக்கிறது.

காற்று வருவது தெரியும். ஆனால் கரும்புலிகள் வருவது குண்டு வெடித்தபின் தான் தெரியும். என இராணுவதலைமைப் பீடங்கள் தலையைப் பிய்த்துக்கொள் ளுமளவிற்கு தலையிடியாக கரும்புலிகள் மாறி விட்டார்கள்.

கடந்த ஏழு வருடங்களுக்குள்ளேயே இத்தகைய வளர்ச்சியைக் கண்ட கரும்புலிகள் எதிர்காலத்தில் ஒருவராலும் நினைத்துப் பார்க்க முடியாத உச்சக்கட்ட வளர்ச்சிகளைப் பெறுவார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை

ஒரு இலட்சியத்திற்காக தமது உயிரையே தியாகம் செய்யும் இந்த கரும்புலிகளை நினைத்துப் பார்க்கையில, தமிழினத்தின் விடிவு வெகு தூரத்தில் இல்லை என்பது புலப்பட்டுவிடும். (சி)

### பலதும் பத்தும்

**குளத்தை சுற்றிவர...**

மழைநீர் வீணாக ஓடிக் கடலிற் கலக்காதிருக்கக் குளங்களில் தேக்கி வைக்கிறோமல்லவா? அவற்றை ஆழமாக்கிக் கொள்ளளவைப்பெருக்கிறோம், அக்குளத்திற்கு நீர் கொண்டுவரும் வாய்க்கால்களை தூர் எடுத்து, தேவைபற்ற செடி கொடிகளை வெட்டிவிடுவதும் அவசியம்.

ஆனால்... குளக்கட்டைச் சுற்றி நாட்டப்பட்ட மரங்கள் பல மறைந்து வருவதைப்பற்றியும் நாம் கவலைப்படவேண்டும்!

சூழல் மாசடையாதிருக்க ...கூடிய மழையைப்பெற்றிட... மண்ணரிப்பைத் தடுக்க மரங்கள் அவசியம்; அத்தோடு... குளங்களைச் சுற்றி நாட்டப்பட்ட மரங்கள் வேறோர் பணியையும் செய்கிறது. குளத்து நீர் ஆவியாதலைத் தடுக்கவும் அவை உதவுகின்றனவாம்...!

— மயூரன்

# தீர்வுத் திட்டத்தை அரசு விடுதலைப் புலிகளிடம் முன்வைக்காது

## — அமைச்சர் பீரிஸ்

[கொழும்பு]

இனப்பிரச்னைக்கு அரசு முன்வைக்கவுள்ள தீர்வுத் திட்டத்தை அது முதலில் விடுதலைப் புலிகளிடம் முன் வைக்காதென அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசின் தீர்வுத் திட்டம் முதலில் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின் பே ஏனைய கட்சிகளிடம் சமர்ப்பிக்கப்படுமென சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றகாலத்தில் அரசு கூறிவந்தது தற்போது அதன் நிலை என்ன என்று பத்திரிகையாளர்கள் அமைச்சர் பீரிஸிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் இதில் அக்கறையுள்ள சகல கட்சிகளிடமும் இது சமர்ப்பிக்கப்படும்; அதன் பின்னர் மக்களுக்கும் இத்தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிப்போம்,

அரசு தயாரித்துள்ள தீர்வுத் திட்டம் பெரும்பாலும் அடுத்த இருவாரங்களில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். சி-கி

# இராணுவ தளபாட உதவியை இந்தியா இலங்கைக்கு வழங்கும்

(கொழும்பு)

இராணுவ உதவி குறித்து இந்தியாவுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாகவும் ஆயுத தளபாடங்களை இந்தியா வழங்குமெனவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியுள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்: இந்தியா எமது நட்புநாடு. இந்நிலையில் புலிகளுக்கு எதிரான இந்தப் போரில் இராணுவ தளபாட உதவிகளை அவர்களிடம் கோரியுள்ளோம்.

அரசின் சமாதானத் தீர்வுத் திட்டம் குறித்து விடுதலைப் புலிகளுடன் மேலும் பேச்சுக்கள் நடாத்தப்படமாட்டாதெனக் கூறிய திரு. லக்ஷ்மன் கதிர்காமர் எதிர்காலத்தில் பேச்சுக்கள் நடைபெறுமா என்பதற்கு பதில் கூறமறுத்துவிட்டார்.

இந்தப்போரில் ஒருவருடத்தில் வெற்றிபெறுவோமென அரசு கூறியபோது இது குறித்து கால எல்லை எதனையும் அமைச்சர் கதிர்காமர் கூறவில்லை எனினும் விரைவில் வெற்றிபெறுவோம் எனவும் தெரிவித்தார். சி-கி

# சமாதானப் பேச்சு வெற்றிபெற்றால் அயல் நாட்டுக்கு ஆபத்தாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கான சமாதானத் தீர்வை மூட்டை கட்டிவிட்டு அரசாங்கம் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது என்று 'ரஸ்மிய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையை ஒழிப்பதற்கு பின் நிற்கும் அரசாங்கம் யுத்தத்தை அதற்காகச் சாட்டி வருகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்யும் வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிடவுள்ளது. விடுதலைப் புலிகளைத் தடை செய்தால் அரசாங்கத்துக்கு இருக்கும் ஒரே வழி விடுத

[5-ம் பக்கம் பார்க்க]

புவிச்சூழல் காக்க எழுவோம் - அதற்கொரு போர் ஒன்று தொடுக்க விழைவோம்.

# நரசிம்மராவின் வெற்றியை தடுக்க இந்து முன்னணி தீவிர முயற்சி

(புதுடில்லி)

இந்தியாவில் அடுத்தஆண்டு ஜூன் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இந்தியப்பிரதமர் ராவ் மீண்டும் தெரிவு செய்யப்படுவதை தடுக்கும் வகையிலான போராட்டத்தை இந்து முன்னணி இப்போதே ஆரம்பித்துள்ளது.

'விஸ்வ இந்து பரிசத்' என்னும் இவ்வமைப்பு இதற்காக இந்தியாவின் சகல மாநிலங்களிலுமுள்ள மூன்று லட்சம் கிராமங்களிலும் பேரணிகளை நடத்த உத்தேசித்துள்ளது.

இக் கிராமங்களிலுள்ளவர்களுக்கு புனித நீரையும். திருநீற்றையும் வழங்கி ராவுக்கு ஆதரவளிக்க வேண்டாமென இவ் அமைப்பு பிரச்சாரம் செய்யவுளது.

'விஷ்வ இந்து பரிசத்' என்னும் இவ் அமைப்பை பிரதமர் ராவ் இரு தடவைகள் தடை செய்திருந்தமையும், அத்தடை தற்போது அகற்றப்பட்டுள்ளமையும் குறுப்பிடத்தக்கது. கி-சி

# மனிதஉரிமை மீறல்களை கண்காணிக்க குழு நியமனம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல் களைக் கண்காணிக்கும் சிறப்புக் குழு ஒன்றை ஜனாதிபதி திருமதி சந்திரிகா நியமித்துள்ளார்

இக்குழுவின் தலைவராக முன்னாள் சிறைச்சாலை அதிகாரி திரு டி. பி ஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார், இராணுவத்தினரால் கைதுசெய்யப்படும் பொது மக்கள் பற்றி இக் குழுவினர் விபரங்களைத் திரட்டுவர். வி-கி

# அமெரிக்க உளவுப் பிரிவின் உதவியை இலங்கை நாடுகிறது

(கொழும்பு)

அமெரிக்காவின் உளவுப் பிரிவின் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது.

இது குறித்து அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதர் திரு. ஜெயந்த தனபால அமெரிக்கா பாதுகாப்புதுறை அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கான ஆயுத விநியோகம், அவர்களின் ஆழ்கடல் நடமாட்டம் மற்றும் அவர்களின் நடவடிக்கைகள் குறித்து தகவல்களை திரட்டி தங்களுக்கு வழங்குமாறும் இலங்கை அமெரிக்காவிடம் கேட்டுள்ளது.

திரு. தனபால கடந்தமாத நடுப்பகுதியில் ஹவாய்த்தீவு சென்று அங்கு தளமிட்டுள்ள பசுபிக் பிராந்திய அமெரிக்க படைத்தளபதியை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளார் இதன்போது அவர் விடுதலைப் புலிகளுக்கு உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை கடந்த மாதம் இலங்கை வந்த அமெரிக்க விமானப்படையைச் சேர்ந்த இரு அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் ஏவுகணைத்தாக்குதல்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர் -சி

# யாழ். ஆஸ்பத்திரியில் தொற்றுநீக்கி இயந்திரம் செயற்பட முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட புதிய தொற்று நீக்கி இயந்திரம் செயல்படமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இத் தொற்று நீக்கி இயந்திரத்தை செயலபடுத்துவதற்கு பொறியியலாளர் குழு ஒன்று முயற்சி எடுத்தும் கடைசி நேரத்தில் அது பயனளிக்கவில்லை என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது இத் தொற்று நீக்கி இயந்திரத்தை செயல்படுத்துவதற்கு சில உதிரிப் பாகங்கள் தேவைப்படுவதால் அவற்றை கொழும்பில் இருந்து தருவிப்பதற்கு வைத்திய சாலை நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். 170-சி

# அணுகுண்டுப் பரிசோதனையை பிரான்ஸ் நிறுத்த வேண்டும்

(பாரிஸ்)

பிரான்ஸ் தனது அணுகுண்டுப் பரிசோதனைத் திட்டத்தை நிறுத்தாவிடில் அது உலகநாடுகளின் எதிர்ப்பைச்சம்பாதிக்க வேண்டுமென ஆஸ்திரேலிய பிரதமர் எச்சரித்துள்ளார்.

அத்துடன் தென்பசுபிக்மன்றத்திலிருந்து அதனை வெளியேற்றவேண்டி வருமெனவும் அவர் கூறியுள்ளார்.

பதினைந்து நாடுகள் அங்கம் வகிக்கும் தென்பசுபிக்மன்றத்தின் தலைவராக தற்பொழுது அவுஸ்திரேலிய பிரதமர் பணி புரிவதும் குறிப்பிடத்தக்கது. கி-சி

# புலிகளைக் கண்காணிக்க உளவுப் பிரிவுக்கு உத்தரவு

(கொழும்பு)

அமெரிக்காவில் இருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உறுப்பினர்கள் பற்றியும், அவர்களின் செயற்பாடுகள் பற்றியும் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு அமெரிக்கா இராஜாங்க திணைக்களம் உளவறியும் பிரிவுக்கு பணித்துள்ளது என்று 'லங்காதீப' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதுபற்றி 'லங்கா தீப' மேலும் தெரிவிக்கையில், இதன்பிரகாரம் அமெரிக்க உளவறியும் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது. யூன் மாதம் 17ம் திகதி அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோக வாசஸ்தலத்துக்கு முன்பு, 60 பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். அந்த ஆர்ப்பாட்டத்தின்போது அமெரிக்க உளவறியும் பிரிவினர் வீடியோ படம் எடுத்துள்ளனர். [ம-சி]

## தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் காகிதாதிகள் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இப்பொருள்களை கொழும்பில் இருந்து தருவித்து விற்பனைக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்று யாழ். கோட்ட பிரதிகல்விப்பணிப்பாளர் யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவரை கேட்டுள்ளார். 170-சி

# இராசி பலன்

05-07-1995

புதன்கிழமை

[தமிழுக்கு ஆனி-21]

ஸப்தமி முற்பகல் 10-00 வரை; அத்தம் பின்னிரவு 4-40 வரை சித்தயோகம், இராகுகாலம் பகல் 11 57 முதல் 1-27 வரை. சுபவேளை மாலை 4-27 முதல் 5-57 வரை.

மேஷம்; புதிய தொடர்பு, நண்பர் அறிவுரை. பணவரவு:

இடபம்: தொழில் ஏமாற்றம், மனைவி கோபம். அலைச்சல்.

மிதுனம்: அதிகாரிகள் துயர், ஆவேசம், வீண்விரயம்.

கடகம்; விரோதிகளை வெல்லுதல், மனத்தைரியம், பயணம்.

சிங்கம்: மரியாதைக் குறைவு. குடும்ப பிரிவு, வாக்குப்பகை.

கன்னி: முயற்சி பலிதம், எதிர்பாராத நன்மை. தெய்வீக செலவு

துலாம்: மனக்குழப்பம், வேண்டாத பழி, காரிய தாமதம்.

விருச்சிகம்: அறிஞர் மதிப்பு விருந்தோம்பல், கலகலப்பு.

தனுசு: குளம்பித்தெளிதல், கடும்சொல், குடும்ப நன்மை.

மகரம்: உறவினர் தொல்லை. தனிமையடைதல், கடன் படல்.

கும்பம்: கீழான நிலை, பெற்றோர் கவலை. நிதானக் குறைவு.

மீனம்: தொழில் லாபம்' பிரச்சனைக்குத்தீர்வு, கற்பனை.

— ஜோஸ்யர்

# கடல் அணைக்கட்டை புனரமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் றெக்கிள மேசன் கடற்கரை அணைக்கட்டை பரல்கள் மண்மூடைகளை கொண்டு புனரமைப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை யாழ் பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

இத் திருத்தவேலைகளுக்காக ஒரு லட்சம் ரூபாவை பிரதேச செயலகம் ஒதுக்கியுள்ளது.

இந்த அணைக்கட்டு இராணுவத்தினரின் குண்டு வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. 170-சி

# சூடானுக்கு எதிராக படைபல பிரயோகம்! முபாரக் எச்சரிக்கை

(லண்டன்)

சூடானுக்கெதிராக படைபலத்தைப் பயன்படுத்தப் போவதாக எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் அச்சுறுத்தியுள்ளார்.

எகிப்தின் பாதுகாப்புக்கு விரோதமாக சூடான் நடந்து வருவதை இனிமேலும் தான் அனுமதிக்கப்போவதில்லை எனவும் முபாரக் கூறியுள்ளார்

இதேவேளை எகிப்திய அதிபருக்கெதிராக சூடானின் தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டதாக லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எகிப்திய ஜனாதிபதியின் கொலை முயற்சியையடுத்து எகிப்து-சூடான் உறவில் முறுகல் நிலை தோன்றியுள்ளது. கி-சி

# கூட்டுறவு அங்காடி அமைக்க திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு அங்காடி அமைக்கும் வேலையை ஆரம்பித்துள்ளது.

ஏழு வலயங்களாகப் பிரித்து ஒவ்வொரு வலயத்திற்கும் ஒரு அங்காடி அமைக்கும் உத்தேசம் உண்டு என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு அங்காடி அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ 15 லட்சமெனவும் மதிப்பீடு செய்யப்பட்டது. 170 சி

# முபாரக்கை கொல்ல முயன்றவர்கள் எகிப்தியர்

(லண்டன்)

எகிப்திய ஜனாதிபதி முபாரக்கை படுகொலை செய்ய முயன்ற ஐவரும் எகிப்தியர்களே என எதியோப்பிய வானொலி தெரிவித்துள்ளது.

இந்தக் கொலை முயற்சியில் மூன்று எதியோப்பிய பாதுகாப்புத் துறையினரும் ஒரு சூடான் உளவாளியும் சம்பந்தப்பட்டுள்ளதாக எகிப்திய ஜனாதிபதி தெரிவித்தகூற்றுக்கு எதியோப்பியா கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

எதியோப்பியாவுக்குஆத்திரமூட்டும் கூற்றுக்களை விட்டுவிட்டு இச்சம்பவத்தில் முபாரக்கின் உயிரைக் காக்கும் முயற்சியில் தமது உயிரைத் துறந்த எதியோப்பிய படையினருக்கு எகிப்து முதலில் தனது அனுதாபத்தைத் தெரிவிக்க வேண்டுமெனவும் எதியோப்பிய வானொலி தெரிவித்துள்ளது. கி-சி

# பேராசிரியர் துரைராஜாவுக்கு உடுப்பிட்டியில் சிலை

(நெல்லியடி)

காலஞ்சென்ற பேராசிரியர் அமரர். துரைராஜாவின் அளப்பரிய சேவைகளை நினைவு கூரும் வகையில் அவரது முழு உருவத்திலான சிலை ஒன்றை உடுப்பிட்டிப்பகுதியில் நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலை பழைய மாணவர் சங்கமும், அதிபர். என். ஆனந்தராஜாவும் நலன் விரும்பிகளும், முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், ஆ. வ தங்கராசாவும் இச்சிலையை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றார்கள்.

விரைவில் இச்சிலை உடுப்பிட்டிப்பகுதியில் நிறுவப்படவிருக்கின்றது. 160-கி

# சீன ஏவுகணைகளை பாகிஸ்தான் வாங்கியது

(வாஷிங்டன்)

இடைநிலைத்தொலைவு ஏவுகணைகளை சீனாவிடமிருந்து பாகிஸ்தான் வாங்கியுள்ளது என அமெரிக்க உளவு ஸ்தாபனத்தை ஆதாரம் காட்டி 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

'எம்-11' ரக இத்தகைய ஏவுகணைகள் முப்பது, பாகிஸ்தானிலுள்ள விமானத்தளமொன்றில் வைக்கப்பட்டுள்ளதை அமெரிக்க செய்மதிகள் மூலம் பெறப்பட்ட வேவுத்தகவல்கள் தெரிவிப்பதாக 'வாஷிங்டன் போஸ்ட்' தெரிவித்திருக்கிறது.

இந்த நடுத்தர ஏவுகணைகளை இந்தியாவைத் தாக்க பாகிஸ்தான் பயன்படுத்தலாமென புதுடில்லி அச்சம் தெரிவித்துள்ளது. கி-சி

# வட-கிழக்கில் இடைக்கால சபை வேண்டாம் இராணுவ கட்டுப்பாட்டில் விடுக!

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வாக அரசாங்கம் அறிமுகப்படுத்த இருக்கும் இடைக்கால சபையைநடைமுறைப்படுத்தவேண்டாம் என்றும், அந்தந்தப் பகுதியை படைஅதிகாரிகளின் நிர்வாகத்தில் விடும்படியும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 58 பேர் ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை கேட்க இருக்கின்றனர் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

லங்கா தீப' மேலும் தெரிவிக்கையில், இடைக்கால சபையை அறிமுகப்படுத்தினால் தமிழர்களின் பாரம்பரியத்தை ஏற்றுக்கொண்டதாக இருக்கும். நாட்டில் உள்ள மூன்றிலொரு பிரதேசத்தை நிர்வகிக்கும் பொறுப்பு தமிழர்களுக்கு கையளிப்பதாக அமையும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை 'இடைக் கால சபை ஒன்றை அமைப்பதன் மூலம் புலிகளை இப்பிரச்னையிலிருந்து ஒதுக்கிவிடலாமென மற்றொரு தரப்பு அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. (ம-சி)

# அமெரிக்க இராணுவ தளம் இலங்கையில் அமையும் சாத்தியம்

(கொழும்பு)

அமெரிக்கா தனது இராணுவ தளமொன்றை இலங்கையில் அமைக்கும் சாத்தியம் அதிகரித்துள்ளதாக 'ஹிரு' என்ற சிங்களப் பத்திரிகை எச்சரித்துள்ளது.

இதுபற்றி அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: ஆசியாவின் பாதுகாப்பை பாரதூரமாக பாதிக்குமென அரசியல் அவதானிகள் தெரிவித்த இரணவில 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' திட்டத்திற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்தவுடன் அமெரிக்காவின் ஐந்தாவது கடற்படைப் பிரிவை இந்து சமுத்திரத்தினுள் அமைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது

இக்கடற்படை பிரிவினூடாக அமெரிக்கா, தெற்காசிய பிராந்தியத்தினுள் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாக தலையிட வழி வகுக்குமென அவதானிகள் கருதுகின்றனர் அக்கருத்தை உறுதிப்படுத்தும் ஒரு அம்சமாகவே கடந்த வாரம் அமெரிக்க கடற்படைப் பிரிவு இந்து சமுத்திரத்தினுள் நுழைந்துள்ளது.

அண்மையில் இந்திய-அமெரிக்க கடற்படையின் கூட்டு இராணுவஒத்திகை கொச்சின் கடற்பரப்பில் நடந்துள்ளது. இதைவிட கொச்சின், கோவா பகுதிகளில் அமைந்துள்ள இந்தியக் கடற்படைத் தளங்களை அமெரிக்கா, போர்க்கப்பல்களைத் திருத்துவதற்காக உபயோகிக்கவும் அமெரிக்க அதிகாரிகள் இந்திய அரசுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

இச் சம்பவங்கள் அனைத்தும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' அமைக்க நாடாளுமன்றில் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்பே நடைபெற்றுள்ளன. எனவே இரணவில பிரச்னை மிகவும் தீர்மானகரமான முறையில் தெற்காசிய நாடுகள் பலவற்றின் அரசியல் நிலைமையை பாதிப்பதாக அமையுமென அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

முதல் சந்தர்ப்பத்தில்நேரடி இராணுவ பிரசன்னத்தை அமெரிக்கா ஏற்படுத்தாது விடினும் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா வானொலி நிலையத்தை அமெரிக்க படைப்பிரிவிற்காக அனைத்து தொடர்பு மத்திய நிலையமொன்ருக அதனைப் பயன்படுத்துவது தவிர்க்க முடியாதொன்ருகி விடுமெனவும் தெரிவித்துள்ளது.

சி

## சமாதான பேச்சு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

லைப் புலிகளுடன் போர் புரிவது தான்.

இதற்கு அயல்நாட்டு உளவுச் சேவை பின்னணியில்உள்ளது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றியளித்தால் அயல்நாட்டுக்கு பெரும் பாதகமான விளைவுகள் ஏற்படும் என்று இந்த உளவுப்பிரிவு இயங்கி வந்ததே இலங்கையின் இன்றைய யுத்த நிலைக்குக் காரணமா மென்று 'ரஸ்மிய' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

மகிசி

## திருடன் பிடிபட்டான்

(நெல்லியடி)

பகல் வேளை வீட்டிலிருந்து சுமார் 25 ஆயிரம் ரூபாபெறுமதியான பொருட்களைத்திருடியவரை மறுநாள் காலை பருத்தித்துறை காவல்துறையினர் கைது செய்ததுடன், திருடப்பட்ட பொருட்களையும் மீட்டெடுத்தனர்.

இச்சம்பவம்கடந்த 27ம்திகதி புலோலி தெற்கு வீரபத்திரர் கோவிலடியில் இடம்பெற்றது.

160-கி

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(நெலலியடி)

மந்திகை மருத்துவமனையில் கட்டாக்காலிகளாகத் திரிந்த சுமார் இருபத்தைந்து நாய்கள் அண்மையில் அழிக்கப்பட்டன.

160-ர

## அன்பளிப்பு

(ஆனைப்பந்தி)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் பாடசாலையின் மாணவர்களுக்கு கொப்பிகள், எழுதுகருவிகள் ஆகிய கற்றல் உபகரணங்கள் அண்மையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினுல் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

101

## சவால்களைச் சருகாக்கியவர்கள்

அண்ணனின் இதயத்தில்
உயிர் வாழும் ஜீவன்கள்
அடலேறியவர்கள்
தலைவனின் சுட்டுவிரல்
சுட்டிக் காட்டும் இலக்கெல்லாம்
இதயத்தையே வெடியாக்கி
இலக்குப் பிசகாத குறிகளாய்
இடிமேல் இடியாய்
வரிமேல்க் கரியாய்
வரலாருய்
எம்மின வாழ்வுக்காய்
கடலுடன் கடல்நீராய்
காற்றுடன் காற்ருய் கலந்திட்ட,
'பிரபாகரன்' வளர்த்து அனுப்பிய
எரிமலைப் பிழம்புகள்.
எங்கள் கருவேங்கைகளுக்கு
இது சமர்ப்பணம்.

-ச. ஜோர்ஜ்

## அரசியல் தீர்வை பின்தள்ளவே இடைக்கால சபையாம்

(கொழும்பு)

அரசாங்கம் வடக்கு கிழக்குப் பிரச்னைக்கு அரசியல் தீர்வை பின்தள்ளிப் போடுவதற்காகவே இடைக்கால சபை ஒன்றை நியமிக்க முயல்கிறது என்று 'ரஸ்மிய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த இடைக்காலசபையை ஆதரிக்கும தமிழ்க் கட்சிகளுக்கு வடக்கு-கிழக்கு மக்கள் எந்தவித அதிகாரமும் கொடுக்கவில்லை எனவும் 'ரஸ்மிய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

மகி

## நீரிறைக்கும் இயந்திரம் கடனடிப்படையில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேளாண்துறை மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த முயற்சியுள்ள 6 பயனாளிகளுக்கு கடன் அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விநியோகித்துள்ளது.

இந் நிறுவன கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியினரால் நடைமுறைப்படுத்தப்படும கிராமிய நிதியத்தினூடாக ஒரு பயனாளிக்கு 25.000 ரூபா என்ற அடிப்படையில் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான கடன் வழங்கப்பட்டுள்ளமை ருறிப்பிடத்தக்கது.

தி

பொறளை வைத்தியசாலையில்

# 20 டாக்டர்கள் உட்பட 80 பேர் சுகாதார அமைச்சால் வேலைநீக்கம்

(கொழும்பு)

வைத்தியத் துறையைச் சேர்ந்த 80 ஊழியர்களை உடனடியாக தற்காலிக வேலை நீக்கம் செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த எண்பது பேரில் இருபது பேர் டாக்டர்கள். மிகுதிப்பேர் ஏனைய தரங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் பொறளையிலுள்ள சிறுவர் வைத்தியசாலையில் கடமை புரிபவர்கள்.

சுகாதார அமைச்சு நடாத்திய திடீர் சோதனையின்போது தங்களது பகுதிகளில் இவர்கள் கடமையிலிருக்காமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான தற்காலிக வேலைநீக்கக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிசி

# நிவாரண முத்திரைகள் கிடைத்தும் உணவுப் பொருட்கள் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

பத்தாவது தொடர்வறுமை நிவாரண உணவு முத்திரைகள் மக்களுக்கு வழங்கியும் அதற்கான பொருள்கள் வழங்கும் வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை,

முத்திரைகளை பெற்ற மக்கள் நாளாந்தம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு சென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்புகின்றனர்.

முத்திரைக்கான பொருள்கள் இன்னும் வந்துசேரவில்லையென்று சங்க கிளை முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர் என்று பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனல் முத்திரைக்கான பொருள்கள் விநியோகத்திற்கான முற்பணத்தை சமூக சேவைகள் பகுதியினர் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்காததினுலேயே சங்கங்கள் பொருள்களை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சூழ்நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வறுமை நிவாரண முத்திரைகளை நம்பியே வாழ்கின்றனர்.

ஆனல் முத்திரைகள் மக்களின் கைக்கு கிடைத்தும். கடந்த இருவாரமாக பொருள்கள் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இதனல் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களே பெரிதும் சிரமப்பட்டுவருகின்றனர்.

170-சி

# வீர விருதுபெற்ற 2 இராணுவத்தினருக்கு மோசடி குற்றச்சாட்டில் 10 வருட சிறை

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுத்துறையில் கடமையாற்றிய இரு லெப்டினன்களுக்கு தலாபத்து வருட கடூழிய சிறைத்தண்டனையை பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிபதி ரி. பி. வீரசூரியா விதித்தார்.

1986ம் ஆண்டு கொழும்பு வர்த்தகர் ஒருவரிடம் தாம் ஜே. வி. பி, உறுப்பினர் எனக் கூறி 20 லட்சம் ரூபா பணத்தை மிரட்டிப் பெற்றுக் கொண்டதாக இரு இராணுவ லெப்டினன்கள் மீது குற்றம்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது,

நீண்ட விசாரணையின் பின் நீதிபதிதமது தீர்ப்பில் கூறுகையில்:

மேற்படி இருவரும் தமது கடமைகளை சரியாகச் செய்யாமல் மாருக பொதுமக்களிடம் இருக்கும் பணம் பற்றிய தகவல்களைச் சேகரித்துள்ளார்கள், வீடுகளில் கொள்ளையடித்துள்ளார்கள், பொதுமக்களிடம் கப்பம் பெற்றுள்ளார்கள். இவர்களின் குற்றங்கள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறினுர்.

மேற்படி இரு இராணுவ அதிகாரிகளுக்கும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் சிறப்பாக சேவையாற்றியதற்காக கடந்த அரசாங்கம் சேவைப் பதக்கமும் பதவி உயர்வும் வழங்கி கௌரவித்ததும் குறிப்பிடத்தக்கது.

விகி

## வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கி விரட்டியடித்துள்ளனர். கடற்புலிகளின் இந்த தாக்குதலுக்குப் பின்னர் அப்பகுதிக்குள் கடற்படையினர் பிரவேசிக்கவில்லையென தெரிவிக்கப்பட்டது.

இந்த தாக்குதலில் சிறிலங்கா கடற்படை அதிகாரி ஒருவர் காயமடைந்தாகபாதுகாப்பு அமைச்சு கூறியுள்ள போதும் உண்மையான இழப்புகள் தெரியவரவில்லை.

இத்தாக்குதலில் லெப். ஆதவன் என்ற போராளி வீரச்சாவு அடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

160-90-ரி

## பரிசில் நாள்

(யாழ்ப்பாணம்)

கைதடி - நாவற்குழி அ. த. க. பாடசாலை பரிசில்நாள நாளை வியாழக்கிழமை பி,ப. 5 மணியளவில் அதிபர் திரு. வே. இராமா தலைமையில் பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராகபிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

-ரி

## தமிழீழமெங்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தைகளும் கட்டப்பட்டுள்ளன.

விசேடமாக அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் கரும்புலிகளின் திருவுருவப்படங்களை வைத்து மலர்தூவி அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கரும்புலிகள் நாளை இன்று சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு பொது அமைப்புக்கள் பல கடந்த சிலநாட்களாக பெரும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு கரும்புலிகள் ஊர்தி பவனி நேற்று ஆரம்பமாகியது,

கரும்புலிகள் தினத்தை ஒட்டி இன்று தமிழீழம் எங்கும் பொதுவிடுமுறை தினமாகும் என்பது குறிப்பிடத்தக்கது-

தாயக மண்ணுக்காக முதலில் கரும்புலியாகச் சென்று தன்னை அர்ப்பணித்த கரும்புலி மில்லருடன் ஆரம்பமான கரும்புலிகள் பட்டியலில் இன்று 43 வீரவேங்கைகள் இடம்பெற்றுள்ளனர்.

170-ரி

## வடமராட்சி நோக்கி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இடங்களில் பொதுமக்களின் குடியிருப்புக்கள் சேதமானதுடன்கால்நடைகளும் பலியாகின.

மக்கள் பாதுகாபான இடங்களில் ஒதுங்கிக் கொண்டமையால் எவ்வித உயிர் இழப்புக்களும் இன்றி தப்பிக் கொண்டனர்.

51- 90- 160- ரி

## நாடாளுமன்றத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவில்லையென்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதிமுறையை ஒழிப்பது போன்ற பல விடயங்களில் பின் நிற்பதைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டப்பேரணி நடத்தினர்-

ஐந்து நிமிடங்கள் இடம் பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு முன்னுள் சபாநாயகர் எம். எச். மொகமட் தலைமை தாங்கினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ம-ரி

# மட்டக்களப்பில் தமிழர் மீதான இராணுவக் கெடுபிடிகள் அதிகரிப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பில் தமிழ் கிராமங்கள் மீதான ஸ்ரீலங்கா படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் மிக மோசமடைந்துள்ளன.

கடந்த 28ம் திகதி மோட்டார் சைக்கிள் படைப்பிரிவினர் சந்தி வெளிக் கிராமத்தில் இரவு வேளையில் நுழைந்து மூன்று தமிழர்களை சுட்டுக் கொன்றுள்ளதுடன் பல அட்டகாசங்களையும் புரிந்துள்ளனர் அருணகிரி ஜெயராஜா செல்லத்தம்பிசிவா அல்பேர்ட் சின்னத்தம்பி ஆகிய மூவருமே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சம்பவ தினம் சித்தாண்டி முறக்கொட்டாஞ்சேனை ஆகிய கிராமங்களில் புகுந்த இராணுவத்தினர் தமிழர்களை மிக மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இத்தாக்குதலில் பலரின் கை கால்கள் முறிக்கப்பட்டதுடன் தலைக்காயங்களும் ஏற்படுத்தபட்டன,

மட்டக்களப்பில் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா படையினர் சந்தித்து வரும் தாக்குதல் தோல்விகளை அடுத்து தமிழ் மக்கள் அவர்களால் தாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ரி

# புலிகளை வெற்றி கொள்ளும் ஆற்றல் இலங்கை இராணுவத்திடம் இல்லை

[கொழும்பு]

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை வெகு சுலபமாக விரைவில் வெற்றி கொள்வார்கள் என்பது தென்படவில்லை இரு பகுதியினரும் சமபலமாகவே உள்ளனர். அதற்கிடையில் இளம் இராணுவத்தினர் பலர் வருங்காலத்தை காணுமுன் கொல்லப்பட்டுவிருவர்.

இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' யின் மண்டை தீவைவிடுதலைப் புலிகள் கைப்பற்றியது பற்றி குறிப்பிடுகையில், தெரிவிக்கபட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்தபின் ஏற்பட்ட பாரிய இராணுவ பின்னடைவு மண்டைதீவில் ஏற்பட்டுள்ளது. அரசாங்கமும் இராணுவ தலைமையும் ஒன்றை உணர வேண்டும். புலிகள் இன்னும் இராணுவத்தின் கோட்டைகாவல்களை உடைக்கும் நிலையில் உள்ளனர். மண்டைதீவு கடலால் சூழப்பட்டு இருந்தபோதும் புலிகள் அங்கு ஊடுருவியுள்ளனர். அந்த முகாமில் சப்பானைத் தவிர ஏனையோர் அன்றையதினம் தேடுதல் வெளிச்சங்களையும் அணைத்து விட்டு உறங்கியிருக்கிருர்கள்.

மண்டைதீவில் புலிகள் பெறுமதி மிக்க கூடுதலான ஆயுதங்களையும் கைப்பற்றி சென்றுள்ளனர். பூநகரி வெற்றிலைக்கேணியில் புலிகள் 10 கோடிக்கு மேற்பட்ட ஆயுதங்களை அள்ளிச் சென்றது ஒரு பாடமாக இருந்திருக்கவேண்டும் பின் வாங்கும்படை அங்குள்ளஆயுதங்களை அழித்தே செல்வது வழமை இங்குஅது நடைபெறவில்லை என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே-ரி

# புலிகள் பலம் வாய்ந்தவர்களாக தற்போது இருக்கின்றுர்கள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் இப்போது பலம் வாய்ந்தவர்களாக இருக்கிருர்கள் என இலங்கைக்கான தொண்டர் அமைப்புகளின் நிறைவேற்றுச் செயலாளர் கிறைன் ஷல் கூறியுள்ளார்.

மேற்கு நாடுகள் சிறிலங்கா அரசுக்கு குறிப்பாக திருமதி சந்திரிகா ஜனதிபதியான பின்னர் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

ஆயுதங்களும் தொடர்ந்து விநியோகிக்கப் படுகின்றன. ஆனல் உயர் பயிற்சி பெற்றவர்களும் மனேபலம் கொண்டவர்களுமான விடுதலைப் புலிகள் ஆயுதப் படைகளுக்கு எதிராக பலத்த தாக்குதல்களை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.

கேந்திர ஸ்தானங்களான பூநகரி, ஆனையிறவு, பலாலி ஆகிய இடங்களில் சுமார் இருபதாயிரம் இராணுவத்தினரையும் புலிகள் சுற்றிவளைத்துள்ளார்கள்.

கொழும்புத் தளபதிகள் இந்தப் படையினருக்கு விநியோகங்களைச் செய்ய முடியாதிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளை மடக்க அரசுக்கு இருந்து வந்த ஒரே ஒரு சக்தியான விமானப் படைக்கு புலிகளின் புதிய ஆயுதமான விமான எதிர்ப்பு ஆயுதம் ஒரு புதிய அச்சுறுத்தலாக தோன்றியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். -ரி

## சீமெந்துஊழியர் சம்பளம்

[யாழ்ப்பாணம்)

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களின் ஜூன் மாதத்திற்கான சம்பளம் நாளையும் நாளை மறு தினமும் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கூட்டுத்தாபனக் கணக்காளர் திரு. க மகேஸ்வரன் அறிவித்துள்ளார். -ரி

## பலாலி மண்டைதீவிலிருந்து நேற்று ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி மண்டைதீவு காரைநகர் இராணுவ முகாம்களில் இருந்து நேற்று இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

பலாலி இராணுவத்தினர் நேற்று நண்பகல் வேளையில் ஷெல் தாக்குதலை குடியிருப்பு பகுதிகளை நோக்கிமேற்கொண்டனர்.

மண்டைதீவு முகாமில் இருந்தும் இராணுவததினர் நேற்றுக் காலை 6-30 மணியளவில் கரையோர பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். ஷெல்கள் குருநகர் கடற்பகுதியில் விழுந்து வெடித்தது.

இதேவேளை காரைநகர் இராணுவ முகாமில் இருந்தும் இராணுவத்தினர் மூளாய் பொன்னலை பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். 59.90 170-ரி

## அளவை சடலங்கள் குறித்து தகவல் தருபவருக்கு 5லட்சம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

அளவை பகுதியில் உள்ள ஆற்றங்கரையில் காணப்பட்ட ஐந்து சடலங்களை அடையாளம காண்பதற்கு பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளார்கள்.

இந்தப்படுகொலைகள் பற்றி தகவல் தருபவர்களுக்கு ஐந்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கொல்லப்பட்ட ஐந்து பேரும் 25 முதல் 35 வயதிருக்குமென்றும் அடையாளம் காணக்கூடிய எந்த ஒரு அடையாளங்களும இச் சடலங்களில்காணப்படவில்லை என்றும், பொலிஸார்தெரிவித்துள்ளனர். வி-ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] ராரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.

## நெல்லியடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டைந்ததும் கரும்புலிகள் தின நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து ஈகச்சுடரேற்றல் நினைவுக்கல் திரை நீக்கம், கரும்புலி மாவீரர்கள் திருவுருவப் படங்ககளுக்கு ஈகைச் சுடரேற்றி மாலை அணிவித்தல் போன்றவை இடம் பெறும். 51- ரி

## கன்சவேட்டி கட்சியின் தலைவராக மீண்டும் ஜோண் மேயர் தெரிவு

[லண்டன்]

பிரிட்டிஷ் பிரதமர் ஜோண் மேயர் மீண்டும கன்சவேட்டிக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

மேற்படி கட்சியில ஏற்பட்ட பிளவு காரணமாக கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து அண்மையில் பிரதமர் ஜோண் மேயர் ராஜிஞமாச் செய்தார் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிட்ட ஜோண் மேயர் 218 வாக்குகளையும் இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜோண்ரெட்வூட் 89 வாக்குகளையும் பெறறனர்.

கன்சவேட்டிக் கட்சியின் தலைவராக ஜோண் மேயர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரதமர் பதவியிலும் அவர் தொடர்ந்து இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. வி-ரி

## தென்மராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் வீசப்பட்ட குண்டுகள் நாலகு வெடித்ததில் க. மனேன்மணி (53 வயது) மா. தேவசாந்தி ஆகியோர் படுகாயமடைந்தனர் தென்னை மரங்கள் பலவும் சேதமடைந்தன.

கொடிகாமம் ஐயனர் கோவில் பகுதியை மையமாக வைத்து குடியிருப்புக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ரொக்கட் தாக்குதல்களுக்கு கொடிகாமத்தைச்சேர்ந்த ம. கஜீபா [02 வயது] கே. சாமந்தி [10 வயது] ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கபபட்டுள்ளனர் கொடிகாமம் பகுதியில் குடியிருப்புக்கள் மீது சுப்பசொனிக் மேற்கொண்ட ரொக்கட் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்தன.

காலையில் கேட்ட சுப்பசொனிக் விமானங்களின் பேரிரைச்சலை தொடர்ந்து தென்மராட்சி பகுதி எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. மசகள் பாதுகாப்பான இடங்களைத்தேடி ஓடினர்.

தென்மராட்சி கிழக்கில் அதி உயரத்திலிருந்து குண்டுகளை வீசிவிட்டு சில நிமிடங்களில் சுப்ப சொனிக் விமானங்கள் பறந்து சென்றன

155- 90- 170- ரி

## அரசின்

[1-ம் பக்கத் தெடர்ச்சி]

களை மறுத்து, யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க மத குருமார்கள் கண்டன அறிக்கைகளை வெளிட்டுள்ளனர்.

கத்தோலிக்க தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மீது வெறுப்படைந்திருப்பதாக சிறிலங்கா வானெலி நடத்திய பிரசாரம் முற்றிலும பொய்யானது என யாழ்ப்பாண மறை மாவட்ட கத்தோலிக்க குருமுதல்வர் வண எஸ். ஜே இம்மனுவேல் அடிகள் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளை எமது பகுதிகளில் அரசாங்கம் நடத்துகிருர்கள் என்பதையும் விடுதலைப்புலிகளே மக்களின் தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடுகிருர்கள் என்பதையும் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் விடுதலைப்புலிகள் தமது மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவியதையும் அவர் சுட்டிக்காட்டினர்,

கொழும்பில் பாப்பரசர் வந்த வேளையில் இங்கிருந்து அங்கு செல்வதற்குரிய பல்வேறு ஏற்பாடுகளையும் விடுதலைப்புலிகள் செய்ததாகவும் உதாரணம் காட்டி விளக்கினர்.

அப்பொழுது கூட அரச அரசபத்திரிகைகளும் தொடர்பு சாதனங்களும் பாப்பரசரை தரிசிக்க விடுதலைப் புலிகள் மக்களை அனுமதிக்கிருர்கள் இல்லை என்றே பொய்பிரச்சாரம் மேற்கொண்டன, என்றும் அவர் விளக்கினர்.

இதேநேரம் அங்கிலிக்கன் திருச்சபை வண சி. ஜி. ஜெயகுமார் வெளியிட்ட கண்டன அறிக்கையில் கத்தோலிக்க திருச்சபை என்றும் தமிழ் என்றும் தமிழ்மக்களின் வளர்சியில் போராட்டத்தில் இரண்டறக் கலந்து செயல்பட்டுவருகின்றது இலங்கை அரசு கத்தோலிக்கத் திருச்சபையை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கும் நோக்குடன் வெளியிட்ட செய்தியாகவே இதை நாம் கருதுகின்ருேம் என்று குறிப்பிட்டுள்ளார். வி-ரி

## வொய்ஸ் ஒவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

யோர்மீது பொலிசார் சுட்டதில்ஒருவர் பலியானர்.

அமெரிக்க சுதந்திர தினமான நேற்றுகொழும்பிலுள்ள அமெரிக்கதூதரக காரியாலயத்தின் முன பல ஆயிரக்கணக்கானேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டதோடு அமெரிக்க நாட்டு கொடியையும் அங்கு தீயிட்டு கொழுத்தினர். இலங்கையின் பண்பாடு கலாசாரத்தை நாசம் செய்யும் திட்டமே வொய்ஸ் ஒப் அமெரிக்கா நிலைய கட்டுமாணங்கள் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரரை கலைந்துசெல்லபொலிசார் கண்ணீர்புகை குண்டுகள் வீசியும் சரிவராது போகவே துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் பலியானர் என்று தெரிவிக்கட்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு வாசுதேவ நாணயக்கார டெளத்த, கத்தோலிக்க மத குருமார் உட்பட ஆயிரக்கணக்கானேர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் வாகனங்களை செலுத்த முற்பட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலிஸார் தமது உத்தியோகபூர்வ இலக்கத்தகடுகளை அணிந்திருக்கவில்லை என்றும் பி. பி ஸி தெரிவித்தது.

இதேவேளை ஐ. தே. க ஆட்சிகாலத்தில், இரணவிலவில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிறுவுவதை எதிர்த்த அதே எதிர்க்கட்சியினர், தற்போது அமெரிக்காவோடு ஒட்டி உறவாடி அவர்கள் நிறுவும் முயறசிக்கு ஆதரவு வழங்கி வருவது ஆச்சரியமளிக்கிறது என ஏ. எவ். பி செய்தி தெரிவித்தது. கே- வி- ரி

## வடகிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூட்டுமளவுக்கு நிலைமை மோசமடைந்து வருகின்றன.

கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் தமிழ் மக்கள் பொலிசாரால் கைது செய்யப்படுவது அதிகரித்து வருகிறது. சண்டை நடக்கும் பகுதிகளான வடக்கு கிழக்கில் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது யாழ்ப்பாணத்து பொதுமக்கள் மேலும் மேலும் அதிகமாக தனிமைப்படுவதைகண்டு மனம் வருந்தவேண்டியுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கான அவசரகால மருந்துப் பொருட்களின் இருப்பளவை இரட்டிக்கவும் அங்கே மேலதிகமான டாக்டர்களை அனுப்பவும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் முடிவெடுதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது கே ரி